

அமரர்

# திரு. முத்துக்குமார் பரம்சோதி


அவர்களின்

1ம் ஆண்டு நினைவு மலர்

20.09.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு

1955.09.26

இறப்பு

2007.09.20

# அமரர். முத்துக்குமார் பரஞ்சோதி

அவர்கள்

## திதி விபரம்

2007.09.20 வியாழன் தமிழுக்கு புரட்டாதி மாதம் 03ம் நாள் பூர்வபட்ச நவமித்திதியில் முத்துக்குமார் பரஞ்சோதி அவர்கள் சிவபதம் அடைந்த நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிர
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

## திருவாசகம்

தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறள் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்திறள் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்யாம் அல்லற்படை வாராமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு உள்ளம் குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவியன் நிர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முத்துக்குமார் பரம்சோதி (கவிஞர்)

## கிராம உத்தியோகத்தர் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்த அண்ட சராசரத்தில் நாம் வாழும் பூமியானது இறைவனின் படைப்புகளில் மிக அற்புதமானது. இப்பேருவதில் இறைவனின் படைப்புகளில் மனித பிறவியானது புனிதமானதும் புண்ணியமானதுமாகும். இந்த மண்ணை ஆண்டவர்கள் கோடான கோடி இன்னும் ஆள்பவர்கள் எத்தனை கோடி என்ற தத்துவத்தின் அடிப்படையில் நம்மை விட்டு பிரிந்து சென்ற மனிதர்களை நினைவில் நிறுத்தி வைக்க அவர்கள் வாழும் போது பதித்துச்சென்ற தடயங்கள் மனித வரலாற்றில் இயல்பாகவே பதிந்து விடுகின்றன அந்த வகையில் நினைவில் நிறைந்து மனதை விட்டுவிலகாத அறிந்தவர் மனதிலும் தெரிந்தவர் நினைவிலும் வானுறையும் தெய்வத்துள் வைத்து மதிக்கும் நிலை பெற்று தான் வாழ்ந்த தமிழ் சமூகத்துக்காகவும் தனது தொழில் சார்ந்த சமூக மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தமிழ் அபிமானியான அமரர் முத்துக்குமார் பரஞ்சோதி அவர்களை வரலாற்று ஏடுகள் பதிந்து கொண்டதில் புனிதம் பெறும்.

பல வளங்களும் பொழியும் திருகோணமலையில் எழில் கொஞ்சும் மூதூர் நிலத்தின் மலைமுந்தல் எனும் கிராமத்தில் முத்துக்குமாருக்கும் (கூட்டுறவுசங்க முகாமையாளர்) நாகம்மாவுக்கும் தவப்புதல்வராக 1955 வருடம் புரட்டாதி மாதம் 26ம் நாள் அவதரித்தார் அன்னாரே குடும்பத்தில் மூத்த சகோதரராவார் இவருடன் இரண்டு இளையசகோதரரும் மூன்று சகோதரியும் உடன்பிறந்தவர்கள் ஆவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை 1961ம் வருடம் தி/அல்ஹம்ரா மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றார் மேலும் தனது மேல்வகுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை இவ் மகாவித்தியாலயத்திலேயே தொடர்ந்தார் மேலும் பாடசாலை படிப்பினை முடித்ததும் பல சமூக சேவைகளை மேற்கொண்டுவந்தார் மேலும் இவர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் உறுப்பினராகவும் விளையாட்டுக்கழக உறுப்பினராகவும் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவராகவும் (பாலத்தடிச்சேனை) ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் (ஸ்ரீ பாலமுருகன் பலத்தடிச்சேனை) இருந்து பல சேவைகளை நிலை நிறுத்தினார் சமூகத்தின் தேவைகளையும் ஒற்றுமையையும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தன்னையும் அர்பணித்து செயலாற்றியவர் அதுமட்டுமின்றி இவர் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால போராளிகளின் ஒருவாராவார் 1977ம் ஆண்டின் ஆரம்பகாலத்திலிருந்து மிக நீண்டகாலமாக ஈழ புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) இயக்கத்தில் தன்னை முழுமையாக இணை தமிழ் தேசிய விடுதலை போராட்டத்திற்கு பல்வேறு பங்களிப்புகளை வழங்கிய ஒரு போராளியாவார் ஈரோஸ் அமைப்பினால் அப்போது வெளியிட்ட பொதுமை, பத்திரிகையின் ஆசிரியர் குழுவின் ஒருவராவார் இவர் அப்போது தமிழ் மக்களின் அவலங்களையும் துயரங்களையும் எழுத்துக்களில் வெளிக் கொண்டு வருவதில் பெறும் பங்காற்றிய ஒருவராவார்.

இதனை கவிஞர் பொதிகை, அமுதன் ஆகிய புனை பெயர்களில் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி என்பவற்றில் பல்வேறு படைப்புருவாக்கங்களை பங்களிப்பை வழங்கிய ஒருவர் எழுத்துத் துறையில் பெரும்புலமை பெற்றிருந்த முத்துக்குமார் பரம் சோதி ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக பல்வேறு விடயங்களை அறிந்து அதற்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்தவர்களில் ஒருவராவார்.

அத்துடன் 1987ம் ஆண்டு வடக்கு கிழக்கில் இந்தியப்படைகள் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பிரதி நிதிகளாக தெரிவுசெய்யப்பட்ட ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசகராகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமின்றி ஈரோஸ் இயக்கத்தின் தலைவராகவிருந்து தமிழீழ டுதலைப்புலிகளின் முக்கியஸ்தராக செயல்படும் வே.பாலகுமார் மற்றும் ஈரோஸ் இயக்கத்தின் முக்கியஸ்தராக இருந்து தற்போது முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் கிழக்கு மாகாணசபையின் எதிர்கட்சித்தலைவராகவுள்ள பசீர்சேகுதாவூத்தின் நெருங்கிய நண்பருமாவார் 1994ம் ஆண்டில் தனது அரசியல் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கி கொண்டார். இவர் கிராம சேவையாளராக மக்களின் நன்மதிப்பை பெறுமளவிற்கு இறுதிவரை கடமையாற்றினார். இறுதியில் இவர் தமிழ் குலத்துக்கு சேவை செய்வது பிடிக்காமல் தமிழ் தேசக் துரோகிகளின் துப்பாக்கி முனைக்கு இலக்காகி தன்னுயிரை ஈந்து மக்கள் மனங்களில் நிறைந்தார். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

சாந்தி

சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவுக்கு வித்தாகி................

(கணகசபை -தேவகடாட்சம்)

மல்லிகைத் தீவு

மனிதனென்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போன்று தன்னை ஈந்து தியாகியாகலாம் !

ஜனனம் - மரணம்
இவை இரண்டிற்கும் இடையில் வாழ்வு
'இவர் போலயாரென்று' மக்களால் நன்றி பொங்க
பேசப்படுகின்றார் என்றால் அவர் வாழ்ந்த வாழ்க்கை
எமக்கெல்லாம் உரை கல்லாக அமைகின்ற தென்பது
மறுக்க முடியாத உண்மையாகும்.
வள்ளலாகவும், தியாகியாகவும் வாழ்ந்து
அந்த வாழ்வையே அர்த்த முடையதாக்கி
விதையாகி விதைக்கப்பட்டவர் அமரர் முத்துக்குமார்.
பரஞ்சோதி என்ற துணிச்சல் வீரன் என்றால் அது வெறும்
புகழ்ச்சி வார்த்தைகளாகாது
உலகிலே மிகப் பெரிய ஆயுதமான எழுத்தாணியை
(பேனா) ஏந்தி எதிராளிகளுடன் சமூகப் பிரச்சனையுடன்
தர்ம யுத்தம் புரிந்து குருதி சிந்தி மரித்தவர்
அவர் மரணம், எமக்குக் கிடைக்கப் போகும் வெற்றியின்
மணியோசை
அவர் மரணம், ஒருவீர வரலாறு
அவர்மரணம், எதிராளிகளுக்கு ஊதப்படும் சாவின் சங்கோசை
அவர் மரணம், விதைக்கப்பட்ட பெருவிருட்சத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறு கொண்ட உயிர் விதை

எம்தாயக மண்ணின் மீது வெகுவிரைவில் பொழிய விருக்கும் சுதந்திர மழையின் நீர்த்துளிகளுக்காய் காத்துக் கிடக்கும் இலட்சிய ஊமை விதை அது.

ஆயிரமாயிரம் பரஞ்சோதிகளை வன்முறையாளர்கள் கோழைத் தனமாய் கொல்லலாம் ஆனால் தாயகமண்ணில் சுடர் விட ஆயத்தமாயிருக்கும் 'தியாக சோதிகளின் ' ஒளிச் சுடர்களை எவராலும் அணைத்து விடலாமென கற்பனையாகக் கூட சிந்திக்க முடியாது.

எழுதப்படப் போகும் ஈழத்தமிழர்களின் எதிர்கால
காவியம் கூறிநிற்கும் செய்தி அதுவாகும்
அந்தக் காவியத்தின் பக்கங்களில் அமரர் பரஞ்சோதியின் தியாகம் இரத்தத்தால் பதியப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க தமிழ்
வாழ்க தாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரதாஸ் விவேகானந்த
ஸ்ரீ நாராயண புரம்
தோப்பூர்

அன்பு நண்பன் பரஞ்சோதியின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ந்து விட்டேன். அன்னார் ஓர் சமூகத் தொண்டன். மக்கள் சேவகன் என்னும் தனது கருத்தில் உறுதியானவன். தான் வாழ்ந்த கிராமத்தின் விழவுக்காக அயராது உழைத்தவன் துடிப்பான இளைஞர் காலத்தில் பல்வேறு துறையில் ஈடுபாட்டுடன் உழைத்தவர் அவையாவன

பாலத்தடிச் சேனையில்

இளைஞர் சேவை மன்றம்

இளைஞர் விவசாயிச் சங்கம்

சனசமூக நிலையம்

கிராம அபிவிருத்திச்சங்கம்

ஆலய பரிபாலன சபை (தலைவர்) (முருகமூர்த்தி ஆலயம்) பகுதி விருப்புக்களை இலவசமாகவே நடாத்தினார். 1972 அக்காலம் இளைஞர்கள் சித்திரவதை சிறை அடைப்புக்காலத்தில் எழுச்சியுற்று பின்பு தர்ச்சீக வழிதான் சிறந்தது என ஈரோஸ் இயக்க இணைப்போடு உண்மையாகவே பொது உடமை கொள்கையில் பற்றுடன் திகழ்ந்தார் 1974 குடியரசு தினத்தினை பகிஸ்கரிப்புச் செய்வதில் நாம் அனேக ஈடுபாடு காட்டினோம்.

அழக்கழ வானொலியில் இவரது ஆக்கம் வந்த வண்ணமே இருக்கும். இவரை நாம் கவி என்று செல்லமாக அலைப்போம் இவனிடம் தமிழ் புலமை நிறையவே இருந்தது. பட்டி மன்றங்கள் பலவற்றை நடத்தினார்.

இன்று பாலத்தடிச்சேனை தபாலகக் கட்டிடம் இவரதும் இவரது சகோதரர் திரு.சௌந்தரராஜனதும் அயராத உழைப்பால் கிடைத்தவைகள். அருனள் தபாலகம் நூலகம் அறநெறில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நாராயணபுரம் பாலத்தடிச் சேணையின் பெயரைதக்க வைத்தவர் பரஞ்சோதி தான் என்பதில் எந்த விதமான கலப்பற்ற உண்மை.

கிராமத்தை விட்டு சென்றவர்கள் சென்றவர்களாகவே இருந்தனர். என்றும் பரஞ்சோதி தனது மூச்சினை இக்கிராமத்தின் வளர்ச்சிக்காவே வாழ்ந்தவர். 2006 கலவரத்தில் இடம் பெயர்ந்தவர் திருமலை சென்று இருந்து மீளவும் மூதூர் தமிழ் பகுதிக்கு சேவம் செய்ய கிராம உத்தியோகத்தர்கள் வருகை தந்து [22 கிராமசேவர்கள் செயலாற்றிய பகுதியில்] திரு பொன்னுத்துரை அமரர் பரஞ்சோதி முடிந்தவரையிலும் பணி செய்தனர் மக்களுக்கு எந்தவிதமான உதவி செய்யவும் எவரும் முன் வராதநிலையில் தன் உயிரையும் துச்சமென நினைத்தே சேவைகள் செய்தவர் 1 வருடகாலம் எனது இல்லத்தில் தங்கவைத்து அவரது சேவைக்கு உதவினேன். அவர் ஓர் குழந்தை உள்ளம் கொண்டவர் எவரையும் நோகடிப்பது அவரது குதூக்கமல்ல ஆயினும் தனது கருத்தை ஆணித்தரமாகவே கூறுவர் தோற்றத்தில் முதியவர்கள் அவரது அனைத்து செயற்பாட்டினும் அவர் ஓர் செயல்திறன் மிக்க கண்ணியமான நல்ல தோர் சமூக சேவகன். உத்தி யோகம் வந்த போதிலும் எந்தவிதமான பந்தாவும் காட்டாது தனது பணியினை செம்மையாகவே செய்தவர்.

1983 அக்காலத்தில் இடம் பெயர்ந்து நான் யாழில் வசித்த வேளையில் அன்னார் ஈரோஸ் இயக்கப் பொறுப்பாளராக மானிப்பாய் அலுவலகத்தில் இருந்தார். அடிக்கடி சென்று கண்டு வருவேன் பின்னர் மல்காரிகம் அலுவலகத்திலும் இருந்தார்.

தனது நண்பர்கள் அவர்கள் குடும்ப முன்னேற்றத்திலும் அதிக ஈடுபாடு காட்டுபவர் தன்னால் முடிந்தவரையும் உதவி ஒத்தாசையினை வழங்கியதை நான் அறிவேன். அன்று 1972ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞன் என்று அனைத்து இளைஞர்களும் செல்லமாக அலைத்த அன்புள்ளம் தான் அமரர் பரஞ்சோதி.

தனது குடும்பத்தின் ஏழ்மை நிலையிலும் பொது உடமை கொள்கையில் உறுதியாகவே நின்று தனது சகோதரர்களும் கூடவே ஈரோஸ் இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்.

தனது சேவைக்காலத்தில் வரம்பு மீறி எதையும் செய்யாதவர். தனது சேவையினை கண்ணியமாகக் செய்தவர் நான் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்திலும் நட்பு ரீதியாக நாம் கழதங்களை பரஸ்பரம் எழுதுவதுண்டு. அவரது வானொலி ஆக்கங்கள் பரஞ்சோதி என்ற கவிதையுடன் பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்து கொள்வார். அவற்றை பாராட்டி எழுதுவது எனது வளமை. பாலத்தடிச் சேணையில் ஓர் நிகழ்ச்சியினை நடாத்தினார். கிராமிய மணம் மிகவும் சிறப்பான நிகழச்சியாகும். என்றும் எவரும் பழகியவர்கள் கவிஞர் பரஞ்சோதியை மறக்க மாட்டார்கள்.

குடும்பத்தினருக்கு தன்னால் முடிந்தவரையும் தந்தை போல் இருந்து வழிகாட்டினார் அவர்களும் இவரது சொற்படி அனுசரித்து பின்பற்றினார்கள்.

அரசியல் பார்வையில் அவர் ஓர் வித்தியாசமான பார்வையில் தனது கருத்தை கூறுவர். அது அனேகமாக அவரது எதிர்வுகூறல்படிதான் நோக்கத்தை நான் அறிவேன். தீட்கண்யமான கண்ணோட்டம் அதை அறிந்தவர் அறிவார்கள்.

இப்படி யெல்லாம் நல் நோக்கம் கொண்ட ஓர் கண்ணியமானவரை கண் இமைக்கும் வேளையில் காலன் கையில் சிக்கவைத்த கொடியவர்கள் இறுதியாக வந்த வசனம் நான் உங்களுக்கு என்ன துரோகம் மடா செய்தேன் என்று அதன் வெளிப்பாடு !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மகான் மகாத்மா காந்தியை கூடக் கொன்றதே ஓர் கோடாரிக்காம்பு தான். எம்இன விடுதலையில் எத்தனை பேர் மாய்ந்து விட்டனர் கோடாரிச் காம்புகளால் அந்த வரிசையில் எமது பரஞ்சோதியும் மொழி மண் மீது பற்றுடன் செயல்பட்டு பரஞ்சோதியில் இணைக்கப்பட்டார். அன்னார் எமது நெஞ்சில் என்றும் வாழ்வார்.

ஈரோஸ் இயக்கத்தில் பல்வேறுமட்டத்தில் செயற்பட்டார்.

அரசியல் துறையில் அனேக ஈடுபாடு கொண்டவர்

கிராம சேவகர் சேவையில் இருந்த போதும் அதிகாரிகள் கருத்துப் பிழை யாயின் அந்த இடத்தில் தங்கியிருப்பது அவரது சுபாவம்.

எவருக்கும் அஞ்சி அடங்கிப் போகாதவர்
அன்பில் தான் வரை அடக்க முடியும்.

தோற்றத்தில் சிறியவர் ஆனால் அஞ்சா நெஞ்சம் கொண்ட பண்பான மறத்தமிழன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் (தாய்)

என் அருமை மகன்ர ஓர் ஆண்டு நினைவு அஞ்சலி

என் மகனை நான் எவ்வளவோ கஸ்டப்பட்டு

படிப்பிச்சி அவர்ர ஊக்கத்தோடு அவர் பட்டம் பெற்றவர்

முதலில் கவிஞராக இருந்தவர் தற்போதைக்கு

G.S. ஆக கடமைபுரிந்து கொண்டு இருக்கையில்

பொல்லாதகாலம் என்னை பருதவிக்க விட்டது ஒரு மலையை

வளர்த்து மலைச்சாரலில் வாழ்ந்து வந்தேன் இப்போ எனக்கு

பிடிக்கவும் ஒரு மரமில்லை தங்கவும் ஒரு நிழலில்லை நான்

பரதவித்து புலம்பிகொண்டு நின்கின்றேன்

நான் ஒன்றை நினைப்பதா ஒரு கோடி கதைப்பதா எனக்கு

ஒன்றும் புரியவில்லை என்ர மக்களும் என்ர பேரப்பிள்ளையளும்

கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் அவர் என்ர மக்கள்

மருமகன் மருமகள் பேரப்பிள்ளையள் எல்லோருக்கும்

அவர் தான் குடும்ப தலைவராக வாழ்ந்து வந்தோம்

தற்போதைக்கு சிறகு இழந்த பறையைப் போல் எல்லாரும்

தவிக்கின்றோம்.

என் அருமைமகன் என்ர வளவில் தான் வீடு கட்டி

என்னோடு கூடத்தான் ஒரு கூண்டுக்கிளி போல் வாழ்ந்தோம்

தற்போது தான் தனிய இருந்து புலம்பித்தவிக்கின்றேன்.நான் காலையில்

எழும்பி என்ர செல்ல மகன்ர முகத்தில் தான் முழிப்பேன்

என்ர மகன் இருந்தால் எனக்கு ஒரு ஊரோடு இருக்கிர மாதிரி இருந்தா

எனக்கு ஒரு வருஷம் போன மாதிரி தெரியவில்லை

என்ர செல்ல மகன் என்னோடு கதைக்கிற மாதிரிதான்

எனக்குப் புலப்படுது நான் யாரிடம் சொல்வேன்?

எவரிடம் முறையிடுவேன்? என்ர செல்வ மகன்ர கவலையால் துயர்ப்படும்

அம்மா, மு.நாகம்மா

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புக் கண்ணீரால் என் அண்ணன் முத்துக்குமார் " கவிஞர் " பரஞ்சோதி அண்ணனுக்கு அருமைத்தங்கை செல்வராசா புஸ்பராணியின் ஒரு வருட நினைவஞ்சலியின் இரங்கள் என் அண்ணன் நான் பூமியில் உதிர்ந்து வருமுன் என் அண்ணன் உலகைப் பார்த்தவர் நான் உதித்ததும் என்னை அரவணைத்தவர் என் அண்ணன் கவிஞர் பரஞ்சோதி தாயினால் நான் பிறந்தேன் என் அண்ணனின் அரவணைப்பால் வளர்ந்தேன் சின்னஞ் சிறுவயதில் நாங்கள் இருந்த நாளை மறக்கமுடியாது என் அண்ணன் மேதை யென்று கூறுவார். சிறுவயதில் என்னோடு கூடி குலாவி வாழ்ந்தார் சிறுவயதில் பல இடங்களுக்குச் சென்று பாடசாலையில் பாராட்டை பெற்றவர் என் அண்ணர் கவிஞர் பரஞ்சோதி அதன்பின் நாங்கள் எல்லாச்சகோதரமும் ஒன்றாகக்கூடி ஒரு குடும்பமாய் வாழ்ந்தோம் அந்நேரத்திலும் என் அண்ணன் கல்வியைத் தவறவிடாமல் படித்து முடித்துவிட்டார். என் அன்னர் கவிதை எழுதுவதில் கவிபுகழாக சிறந்துவிளங்கினார். கவிதையில் நாட்டம் கொண்டு பல பத்திரிகையில் என் அன்பு மிக்க கவிஞர் பரஞ்சோதி அண்ணனின் பெயர் பொறிக்கப்பட்டு இருக்கும் இது எல்லாம் இணைத்துப் பார்க்கும் போது என் கண்களில் இருந்து கண்ணீராய் வருகின்றது ஒவ்வொரு நாளும் என் மடலை எழுதும் போது கவலையாய் இருக்கின்றது என் அண்ணன் இறைவனடி சேர்ந்து ஒரு வருடமாகும். என் அன்பு மிக்க கவிஞர் பரஞ்சோதி அவர்களின் பெயர் என்நேரமும் என்னை நன்றாக கவனித்தப்படி இருப்பார் ஏன் என்றால் என்மேல் பாசம் எல்லோரும் கூட்டுக்குடும்பமாய் வாழ்வோம் என்றும் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் என் அண்ணன், அம்மா, தம்பி போன்ற உறவினரோடு வாழ்ந்து வசித்து தீடீர் மரணம் 2007.09.20ம் திகதி 7.20 மணியளவில் இனந் தெரியாதவரால் படுகொலை செய்யப்பட்டு நன்றாக இறைவனடி சேர்ந்தார் உடல்பிரிந்து உயிரை என்னோடு இணைத்துவிட்டு பகைவரை எதிர்ப்பதில் பெரியவர் பாசத்தை காட்டு வதில் சிறியவர் "கவிஞர் " பரஞ்சோதி என் அன்பு அண்ணன் நீதூரம் சென்று என்னைத் தவிக்க விட்டாய்! உன் நினைப்பு என் மனதில் மாறாது அண்ணா என்றென்றும் என் குடும்பம் இறையடி சேர்ந்துவிட்டாய்! நான் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அன்பைத் தேடி தவிக்கின்றேன் அண்ணா என் குடும்பத்தை ஓர் நல்வழியால் சீராட்டினாய்! இப்போது நாங்கள் கவிஅரசு கவிஞர் பரஞ்சோதி அண்ணனைத் தேடித்தவிக்கின்றோம். என் பிள்ளைகளுக்கு நீ அழகான பெயரைச் சூட்டி அன்போடு அரவணைத்தாய்!

இந் நினைவுகள் என் மனதில் கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்தாக மாறிவிட்டது எப்போதும் நினைவு என் மனதில் இருந்து அழியாது வண்ணமாய் இருந்துவிடும் உன் தங்கை மனம் வாடி தவிர்க்கின்றேன் எப்போது உன்னைக் காண்பேன் ?

" சந்திரன் இரவில் ஒளியைக் கொடுத்து பிரகாஷிப்பது போல்
எங்கள் குடும்பத்தில் ஓர் ஒளியானது பிரகாஷித்த வண்ணம் இருந்தாய்
சின்னஞ் சிறுவரில் இருந்து பெரியோர் வரை குதுகலமாய் இருந்தார்கள்
இப்படி கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தோம் பகைவரின் சதியால் இருளாக
மாறிவிட்டது – குடும்பம் என் அண்ணன் ஓர் புதுமையாக இறையடி
சேர்ந்தார் "

---

## இரங்கல்

### செல்வராசா கயல் வேந்தன் பரஞ்சோதி G.S.
### அவர்களின் மருமகள்

எனது மூத்த மாமா ஆகிய முத்துக்குமார் பரஞ்சோதியாகும் அவர்களின் தங்கையின் மகனாகிய செல்வராசா கல்வேந்தன் எனது மூத்தமாமா என்னோடு கூடிகுலாவி இருந்தவர். எந்நேரமும் நான் சந்தித்தவன்னமே இருப்பேன். எல்லா குடும்பத்தாரும் எனது மாமாவின் வீட்டுக்கு அருகில்தான் அதனால் எல்லோரும் சந்தோசமாக வாழ்ந்து வந்தவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் விலகாத வண்ணம் இருந்தோம் அப்படி நாங்கள் வாழ்ந்த குடும்ப இன்று சிதறிவிட்டது! எனது மாமா ஒரு கிராம சேவை அதிகாரி அவர் பல கிராமம் ஒன்று அவர்களின் கிராம கடமைகளை திறம்பட செய்தவர் அவர் கடமை செய்தகிராமம் அவரைப் பற்றி புகழோடு கதைக்கும். அப்படி கடமை பார்த்தவர் எனது மாமா(G.S)அவர் 2007.09.20ம் திகதி அன்று இனம் தெரியாதவரால் படுகொலை செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை பார்த்த கிராமம் அவரைப்பற்றி திறம்பட புகழ்லோடு இன்றும் எங்களோடு கதைக்கின்றார்கள். இப்படி எல்லாம் கதைக்கின்றார்கள் எனக்கு ஒரே கவலையும் அழுகையும் வரும் இப்படியெல்லாம் இருந்தவர் எனது மாமா எந்நேரமும் நான் கவலையோடு அவரின் நினைப்போடு வாழ்வேன். நான் எனது மாமாவோடு இருந்தது எனக்கு மட்டுந்தான் தெரியும் அல்ல சகலரும் தெரிந்த விடயம் எங்கு செய்வது என்றாலும் எனது மாமாவும் நானும் செல்வோம் என்னையும் அழைத்துச் செல்வார் அப்படி வாழ்ந்த நாங்கள் எல்லோர் குடும்பம் அவரின் வீட்டைச் சுற்றிய வண்ணம் எப்படி இருந்தாலும் எங்களை பார்ப்பது என்றாலும் எல்லோருடைய வீட்டுக்கு என் நேரமும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு நாளும் வந்து எல்லோரோடும் கதைத்து சுகம் கேட்டுச் செல்வார். இப்படி யெல்லாம் கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்துள்ளோம். திடீர் சம்பவத்தினால் எங்களை தன்னந்தனியாக விட்டு விட்டு அவரும் இறைவனிடம் தனியாக சென்று விட்டார் எனது மூத்த மாமா எனது மாமா அவரின் பேரப்பிள்ளைகளோடு விளையாடும் போது அவரும் குழந்தை போல் சிரித்து மணிக்கணக்கில் விளையாடிக் கொண்டு இருப்பார். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நினைவு எங்கள் எல்லோரையும் கவலைப்பட வைக்கின்றது. எனது மாமா சிலநேரங்களில் என்னோடு கதைக்கிறமாதிரி இருக்கும் நான் தனிமையாக இருந்த அழுதுகொண்டு இருப்பேன். மாமாவின் வீட்டைப்பார்த்துக் கொண்டவண்ணம் நினைவில் இருப்பேன் கனவில் சில நேரங்களில் காட்சி அளித்து நன்றாக இருக்கின்றேன் என்று காட்சி அளித்து என்னோடு கதைப்பார். நானும் கதைப்பேன் காலையில் கதைத்த இடத்தில் செல்வேன் சென்றதும் கவலையோடு தன்னந்தனியாக கதைத்துக் கொண்டுடவண்ணம் நிற்பேன் இப்போது எனது மாமாவின் நினைவு எனக்கு வருகின்றது இந்த நாள் எங்களோடு வாழ்ந்தவர் கதைத்த வண்ணம் இருந்தவர் இப்ப மாமாவின் ஒரு நாள் ஒரு வருட நினைவு வந்துவிட்டது இது என்ன உலகம் நேற்றுத்தான் வாழ்ந்தமாதிரி இருக்கின்றது. இப்ப மாமாவின் வருட நினைவு வந்து விட்டது. இந்தக் கடிதம் எழுதும் போது என்னால் எழுத முடியாமல் இருந்தது மாமாவின் நினைவு என்னை தாக்குகின்றது எனது மாமாவை நான் கூப்பிடுவது மூத்த அங்கள் என்று தான் அவர் தான் என்னை மட்டும் இன்று எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் என்று சொல்வதை விட எங்கள் கிராமம் எல்லோரும் அவரிடம் வந்து கதைத்துவிட்டு அவருடைய சில ஆலோசனையை பெற்று இப்படி நாம் இருக்க வேண்டும் என்று கூறுவார் அதை அவர்கள் மதிப்பு கொடுத்து எல்லோரும் எப்படி வாழ்வார்கள். எனது மாமா கிராம சேவகராக மட்டும் இன்றி எங்கள் கிராம ஸ்ரீ முருகன் கோயில் தலைவராகவும் மூன்று வருடம் கடமையாற்றியவர் அல்லவா! எனது மாமா இப்போது என்னோடு வாழ்கின்றார் என்று நான் நினைக்கின்றேன் எனது மூத்த மாமாவின் ஒருவருட நினைவஞ்சலி கவலையோடு கண்ணீரால் கவிதையோடு முடிக்கிறேன்.

சின்னந்துளியாய் பூமியாய் உதிர்த்தவர் பரஞ்சோதி
சிகரம் போல் பூமியில் எழுந்து கவிஞராக உருவெடுத்தார்
சின்னஞ்சிறு கதை எழுதுவதிலும் சிறந்தவர் – கவிஞர்
பல சிந்தனைகளை ஆற்றுவதிலும் வல்லவர் கவிஞர் பரஞ்சோதி

பல சேவைகளைச் செய்து மக்களின் மனதில் குடிகொண்டுள்ள
கவிஞர் பரஞ்சோதி
கதிரவன் மக்களை நான் எல்லாம் காப்பது போல்
கிராம சேவகர் கவிஞர் பரஞ்சோதி மக்களையும் காத்திருவார்
கவிபுகழ் பெற்ற கவிஞர் கற்பனையின் தலைவர்

சிறப்பான பொன்மொழிகளைக்கூறி பொருளோடு புகழ் பெற்றார்
கவி கவி கவி கவிஞா நீ – மாபெரும் மனிதா
என்றென்றும் உன் பெயர் தழைத்தோங்க இறைவன் அருள்புரிவான்
நாள் எல்லாம் உன்பெயர் ஒலிக்க இறைவனை வேண்டுகிறேன்
செல்வராசா கயல் வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபா குடும்பத்தவரின் இரங்கல்

சுடர் விடும் ஒளி விளக்காய் ஒளிதந்த கவிஞன் நீ!
நித்தமும் எம்மனதில் துயிலாத நிலா நீ!
அன்புக்கு இலக்கணம் நீ!
அறிவுக்கு அரசன் நீ!
அன்பாக பிரபா, கயல்விழி, என அழைத்து
எம்மகள் உன் பேத்தி நர்மிதாவை வாஞ்சையுடன்
மார்போடு நீயணைத்து மகிழ்ந்திடுவாய்!
புத்திமதி புகட்டிடும் புகழேந்தி நீ!
இனியார் சொல்வார் எங்களுக்கு!
தத்தளித்து புலம்புதையா எம்மனசு!
கண்டவர் கண்பட்டடோ கயவன் உனை சுட்டறிக்க!
நித்தமும் உமை எண்ணி வெம்புதய்யா உன் உறவு!
இத்தனையும் உந்தனுக்கு கண்ணீர்பூக்கள் அஞ்சலியாய்
தூவுகின்றோம் !

தேசத்தின் கவிவிளக்காய்க்கண்ணியமாய் நடந்த நீ
நீ நடந்த புற்தரையும் பூகுலுங்கி பூ பூக்கும் புற்றரையும்
காத்துன்னை, புலம்புகின்றதே. எமை கண்டவுடன்
வாஞ்சையாய் எமையழைத்து உட்கார நீ கூறி
பணிந்திடுவாய் உணவளிக்க நீயய்ய, பிரபா, கயல்விழி
நர்மிதா, என ஓயாது உரைந்திடுவாய் நித்தமும் நீய்யா
பாதகன் உனை பாழ்கிணத்தில் தள்ளியதை
பார்த்திட்டார் கடவுளய்யா உட்கார்ந்தால் ஊர்
போற்றும் எழுந்து சென்றல் தேசம் புகளும் இந்த
வைக்கும் உயர்வான உன்னத மன்னன் நீயய்யா!
உன்பிரிவால் எம்மவர்க்கு உறங்காத துயரமய்யா
எம்மோடு நீயிருந்த காலம் தான் இனிவருமா
சிந்தித்தால் சிதறுதய்யா எம்மனசு நீ சென்ற
உலகில் நித்தியமாய் உன் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் பிரபா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனையனின் நினைவுகளில் ..........

இரு கரம் குவிக்கின்றேன் - என்
இதய தெய்வமே
ஒரு துன்பியல் கனவாக
உங்களை இழந்து விட்டதாக
ஊரார் பேசுகின்றார்களே
ஐயோ.......... வார்த்தைகள்
என்னைக் கொல்கின்றன
கேட்கக்கூடாத அந்த வார்த்தைகளை
வெறுக்கின்றேன்..... வெறுக்கின்றேன்
என் அன்பு தந்தையே!

என்னை மார்பிலும் தோள் மேலும்
சுமந்து சீராட்டி தாலாட்டி
வளர்த்த அந்த காலங்கள் ......
என்னைச் சபை தனிலே
முந்தியிருக்க செய்த உங்கள் முயற்சி....
ஆசானாய் நடமாடும் தெய்வமாய்
எனது ஒவ்வொரு வளர்ச்சியிலும்
ஊக்கமுடன் பங்கெடுத்து
அறிஞனாய் சான்றோனாய்
சகலராலும் போற்றப்படுத் நிலையில்
என்னை மகனாக மட்டுமின்றி நண்பனாகவும் ஏற்று
எனது விருப்பு வெறுப்புக்களையும் ஆலோசனைகளையும் மதித்தாயே
என் ஆருயிர்ச் செல்வமே அந்த மகத்தான பண்பு இங்கு
யாருக்கு உண்டு? என் அன்பு அப்பாவே, உங்கள்
மகனாக பிறக்க நான் கோடி தவம் செய்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வார்த்தையிலும் ஒரு பாட்டினிலும் என் கதையாகவும் இருக்க முடியாதா...... உங்களது வாழ்க்கை ஒரு காவியமாகும்.

ஏழைகள் மீது அன்பும் உண்மைக்கு மதிப்பும ஊர்மீது

பற்றும் இனத்தின் மீது உயிரையும் விடுதலை மீது வேட்கையும்

கொண்ட நீங்கள் இறந்தது எப்படி நியாயமாகும்?

வெட்கப்பட வேண்டிய வீரர்கள் அனுதாபங்களால் அமைதிப்படுத்த

முடியாத உங்கள் இழப்பை கண்களுக்குள் நீரை சுமந்து

இதயத்தில் வலியை சுமந்து காட்சிகளைக் கரைந்தாலும்

அப்பா உங்கள் சிரித்த முகம் மறையாதே!

அந்த சிரித்த முகம் மறையாதே

ஒன்றா இரண்டா எதைச் சொல்லி

ஓய்ந்து விட

வாழ் நாள் கடந்தாலும் இந்த

வாழ் நிலைகள் அழிந்தாலும்

உங்கள் வாழ் வோடு இணைந்து விட்ட

எனதன்பு மாறாது மறையாது அழியவும் மாட்டாது

என் அன்பு தந்தையே

எரிமலையை சுமந்து இருக்கு

என் இதயத்தின் சுவர்களிலே

உங்கள் முகமலரை செதுக்கி வைத்து

பூஜிக்கிறேன் அப்பா

அஞ்சலியுடன் ஆறுதல் கொள்ளமுடியவில்லை

உங்கள் பாதங்களில் சிரம் வைத்து

சாந்தியாக வணங்கிறேன்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

இலக்கிய ரூபன்

" கண்ணீரும் மாறாது, கனவுகளும் மறையாது "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரனே..........

என்னருமைச் சகோதரனே,
எல்லோர் மனதிலும் வாழும் ஏகாந்தனே
ஊரெல்லாம் போற்றும் உத்தமனே
பார் போற்ற வாழ்ந்தீர் அண்ணா
பெற்றோரையும் உற்றாரையும்
மனைவியையும் மக்களையும்
கற்றோரையும் மற்றோரையும்
அணைத்து அரவணைத்து
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீர் அண்ணா
இளமையிற் கல்வியுடன் பலகலைகளிலும் சிறப்புற்றீர்
தாய் மொழியும் ஆங்கிலமும் தனிச்சிறப்பும் பெற்றிருந்தீர்
நல் மக்களுக்கும் எங்களுக்கும் அதிபதியாக இருந்தீர் அண்ணா,
ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்த உத்தமனே
எமக்குக் காலமறிந்து சால உதவிய சான்றோனே
உன் பிரிவால் வாடுதையா எங்கள் குடும்பம்
உன் ஆத்மா சாந்தியடைய நாலும் என் பிள்ளைகளும்
எல்லாம் வல்ல இறைவனை
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம் அண்ண!

திரு.மு. சிவஞான மூர்த்தி
திருமதி.சி. மகாலட்சுமி
மகள் :- சி. கேதுஜா
சி. கேர்த்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் உருவமாய் ஆருயிர்த் தெய்வமாய் அன்றலர்ந்த மலர்போல் – நீ

அமர்ந்திருந்த அன்பு நிலை. எம் கண்ணைவிட்டு அகலவில்லை – அண்ணா

எம் கண்ணை விட்டு அகலவில்லை !

மலர்ந்த முகத்துடன் மாசற்ற நெஞ்சுடனும் பாசத்தில் உறைவிடமாய் – நீ

பரிந்து பேசும் பண்பு நிலை. எம் கண்கைவிட்டு அகலவில்லை – அண்ணா

எம் கண்ணை விட்டு அகலவில்லை !

தம்பிகளின் வளர்ச்சிக்கு பின்னிருந்து உதவிய பெருந்தகையே– ஏந்தாலே

பெருமையுடன் நீ வாழ்ந்த நிலை எம் கண்ணைவிட்டு அகலவில்லை – அண்ணா

எம் கண்ணை விட்டு அகலவில்லை !

இகந்தனில் நாம் வாழ்ந்திடவே – நீ இட்ட தர்மம் பெரிது அண்ணா

காத்திருந்த காலனவன் கவர்ந்து உம்மை சென்றனால்

கண்ணீர்த்துளிகளை நாம் காணிக்கையாக்குகிறோம்!

கண்ணீர்த்துளிகளை

நாம் காணிக்கையாக்குகின்றோம் !!!

திரு.மு. சிவஞான மூர்த்தி

திருமதி.சி. மகாலட்சுமி

மகள் :– சி. கேதுஜா

சி. கோர்த்திகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த மகான்

நான் அறிந்த மனிதர்களில் நல்லவர்களில் ஒருவராக

நள்பட்டவர்களில் முத்துக்குமார் பறஞ்சோதி

கவரும் உள்ளம் கொண்டவர்

இன்பமாக வாழ வாழ்ந்து காட்டியவர்

இறுதிவரை இன ஒற்றுமையில் நேசம் கொண்டவர்

தன் கிராம சேவையாளர் கடமையின் மூலம்

கிராம மக்களின் நன்மதிப்பை பெற்ற மா.மனிதர்

எனலாம் அவரின் அகால மரணம் கேட்டு

அலரும் உயிர்கள் இவ் உலகில் இல்லை.

கணேஸ் இராமகிருஷ்ணன்
" பொறுப்பதிகாரி "
பிரதேச சபை பொது அலுவலகர்
மல்லிகைத்தீவு
மூதூர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் பூக்கும்......

உள்ளம் ஒன்றிய உயர்விலே நின்று
உள்ளிட்ட அன்பிலே மலரென பூத்து
தெள்ளிய வானிலே நிலவென ஊர்ந்து
துள்ளிய கயலாய் தொடர்கதை வரைந்து

நெஞ்சத்தில் நிழலாய் தொடர்ந்திடும் உருவே
நெஞ்சிலே சிலையாய் வைத்தேன் உனையே
வஞ்சிக் கொடியாய் வளரும் பிறையே
கொஞ்சும் தமிழால் கூவிய குயிலே.

சித்திரம் போலநிதம் சிரித்திடும் மலரே
சீதனமாய் இறைவன் எனக்களித்த பொருளே
உதயத்தைக் காட்டும் பூபாளம் போல என்
இதயத்தில் பூக்கும் பெரியாரும் நீரே.



என் பெரியப்பாவிற்கு ஆயிரம்
மலரில் அர்ச்சனை மலராய்
அன்பு மகள் நிஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு மலர்
## M. பரஞ்சோதி சமர்ப்பணம்

எழுத்தாளனாக, கவிஞனாக, சமூக தொண்டனாக, சீர்திருத்த வாதியாக,சத்தியவாதியாக கிராம சேவை யாளனாக, செயல்திறன் மிக்க வனாக இப்படிப் பல வடிவம் கொண்டசகல கலாவல்லவன் M.பரஞ்சோதி எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டானாலும் அவன் செயல் வல்லமை என்றும் நினைவில் மாறாது அவன் இலட்சியம் நிறைவேற என்றும் நாம் தலை வணங்குவோம்.

அவனில் பாசமும் நேசமும் கொண்ட
நா. நாகேஸ்வரன்.

## கவிதை வடிந்த கவிஞா, உனக்காக
## ஒரு கவிதை

கவிதை வடிக்க முடியவில்லை – காரணம்
உன்னைக் காண வில்லை
தேடினேன் நீ தென்றலாய் வந்து கவிபாட
முடியவில்லை உன் கவிதையை முடிப்பதற்கு
நீ வேண்டும் எங்கே சென்றாய்?
வருவாயா நீ வேண்டும் நீ வேண்டும்

**நீ வேண்டும், கவி பாட !**

தேடினேன் உனைத் தேடினேன் .....
தேசமெங்கும் உனைத் தேடி
பாடினேன் உன் கவிதை பாடினேன் பரஞ்சோதி
நீ வருவாயென.....
வாடினேன் மனம் வாடினேன்
உன் வண்ணக்கவிதையை கேட்பதற்கு
நீ விரைவாக விண்ணுலகம் சென்றதேன்?
வித்திட்ட விதைகள் முளைக்கும் முன்
நீ உதிர்ந்ததேன்?
நீ வேண்டும் கவி பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியொன்று விழுந்ததையா
எங்கள் ரோஜா வனத்திலே
வாசம் கவழ்ந்த எங்கள்
வாழ்வும் பொய்த்தையா!
மீகாமர் இல்லாமல்
நடுக்கடலில் தவிக்கின்றோம்
மாண்டது போல் தெரியவில்லை
மீடொருக்கால் வாறிரோ
அன்பு பெரியப்ப
அழுதழுது தவிக்கின்றோம்
ஆறுதல் இல்லை எந்தன் மனம்
பூமிதனில் இவ் பிறப்பு
பொய்யொன்று உணர்ந்தாலும்
பொறுக்குது இல்லை எந்தன் மனம்
பொங்கி எழுகிறதே!
நெஞ்சில் தீபிடித்து நினைவலைகள் கரிகிவிழா
படை மஞ்சத்தில் விழுந்தாதே
பாதகமாய் போகா தோ— எதிரி வெஞ்சம்
மதில் காணும் வீரம் வீணாகி போனது என் கூற்று
அமரர் வாழ்வில் நிலை பெறவும் ஆண் வனின்
அருள் பெறவும்.
வேண்டுகிறேன் கரம் கூப்பி பெரியப்பாவின்
ஆத்மா சாந்திக்கா
எல்லாம் வல்ல இறைவனே — அருள்வாய்
தென்னாருடை சிவனே!

மகன்

செள. டனோஜன்

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் தமிழுக்காய் வாழ்ந்த
திருமகனாம் எங்கள் அண்ணா – பரஞ்சோதி
கொடிய இளவாத கொடுமைக் காரர்களால்
கொலையுண்டு போனாயே!

தமிழை காதலித்தா பெரும் கலந்தனர்
தமிழ் மக்கள் வாழ்விற்காய் குரல் கொடுக்க
தன்மான தமிழன் ஐயா – உன் மண்ணில்
தனல்லாகி போனாஜோ

பேனா முனையில் யுத்தம் செய்த
போராளிநீ என்றால் மிகை இல்லை
தானாய் நீ முன் வந்து தமிழுக்காய்
உயிர்தந்த தமிழ்தாய் மகளே

தமிழுக்கும் தமிழருக்கும் நீ செய்த
பெரும் தொண்டு தரணியிலே
எப்போதும் பொறிக்கப்பட்ட
போற்றப்பட்ட வரலாறு

முதுகெலும்பு அன்று
மதிக்கப்பட்ட வேளையிலே
மூவின மக்களுக்கும் மூச்சு அடைத்துப் போனது ஐயா!
மூழ்கியது மூதூர் ஆழத் துயரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் சேவகனாய் நீ இருந்தாய்
மக்கள் துன்பம் தீர்ப்பதற்கு நீ வாழ்ந்தாய்
அதற்காய் நீ உந்தன் வாழ்வினையே அர்ப்பணித்தாய்
எதற்காய் ஈனர்கள் உன் உயிர் பறித்தார்.

நீ எனக்கு இருந்து ஆற்றிய பணிகள் எல்லாம்
சொல்லினால் சொல்லி விடமுடியாது என் அண்ணா
கலைகளிலே விண்ணனாய் இருந்தாய்
எம் குடும்பத்தின் மன்னனாய் நீ திகழ்ந்தாய்

உறக்கிப் போனது உன் உடல் தான் உன் உயிர் இல்லை
தமிழின் சொத்தாய் நீ இருப்பாய் எப்போதும்
விடிவு வரும் வேளை வரும் எம் தமிழ் மக்களுக்கு
அப்போதும் அவர் மனத்தில் நீங்காது நீ இருப்பாய்



**மு. சௌந்தரராஜா தம்பி**
**மூதூர் பிரதேச சபையின்**
**எதிர்க் கட்சி தலைவர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எல்லோர்க்கும் இன்னோனாக விளங்கிய

எங்கள் குலவிளக்கு

அமரர். திரு. முத்துக்குமார் பரம்சோதி

அவர்கள் சொல்லாமற் கொள்ளாமல் அணைந்ததை அறிந்து

மரணச் சடங்கின் போது சிரமங்களைப்பாராது கலந்து

கொண்டவர்களையும், கண்ணீர் அஞ்சலிகளாலும், மலர்

வளையங்களினாலும் அன்பளிப்புகளாலும்,

அனுதாபத்தை காட்டிய மக்களுக்கும்.....

மரணங்கேட்டு மனமுடைந்து துவண்டு கிடைக்கையிலே

எமக்கெல்லாம் உணவளித்த அன்பர்களையும்.....

சுற்றமும், சூழலுமாக வந்து சிர பணிபுரிந்தவர்களையும்....

தபாலிலும் தந்தியிலும் ஆறுதல் கூறியவர்களையும்.....

செல்வனே இந்நூல் செழிப்புற

ஆக்கங்கள் தந்தவர்களையும்.......

நினைக்கின்றோம்.



இப்படிக்கு

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org